அ.வ.எண்: 84/2023 நாள்: 03.03.2026

பி.வா.சா.1 –

பூங்கோதை

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் இலக்க சொத்தில் தார்சு வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி வீடு வாதிக்கு அரசாங்கத்தால் கட்டி கொடுக்கப்பட்ட வீடு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தார்சு வீடு கட்டுவதற்கு முன்பாக அதில் கூரை வீடு கட்டி வாதிகள் குடியிருந்து வந்தனர் என்றால் சரியல்ல. அவர்கள் அதற்கு முன்பாக சர்வே எண் 411/2 கூரை வீடு கட்டி குடியிருந்து வந்தார்கள். வாதிகள் மேற்படி கூரை வீட்டில் குடியிருந்து வந்த பொழுது சர்வே எண் 411/4,6,7,8 ஆகிய சொத்துக்களை தான் பாதையாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் சர்வே எண் 411/5 – ஐ தான் பாதையாக பயன்படுத்தி வந்தனர். நான் மேற்படி சர்வே எண்களை வேலி போட்டு அடைத்தல் சம்பந்தமாக வாதிகள் போலீசில் புகார் அளித்துள்ளனர் என்றால் சரிதான்.

2. சர்வே எண். 411/5 பொதுபாதை இல்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகள் சர்வே எண் 411/4,6,7,8 ஆகிய சொத்துக்களை தான் பாதையாக சுமார் 60 வருடங்களுக்கு மேல் பயன்படுத்தி வந்தார்கள் என்றும், அதனால் வசதியுரிமை சட்டத்தின்படி அவர்களுக்கு பாதை கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.03 16:11:28 +0530